# இலங்கை மகாவலி அதிகாரசபை 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்த ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் ஒருங்கிணைந்த ஐந்தொகையின் நடைமுறையற்ற சொத்துக்களிலுள்ள ஏனைய நிதிசார் சொத்துக்களின் பெறுமதி ரூபா 60,968,207,000 ஆக இருந்ததுடன் அப்பெறுமதியினை பிரதிநிதித்துவம் செய்யும் சொத்துக்கள் உறுதியாகக் காணப்படவில்லை. செயற்திட்டங்களின் அனைத்து மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள், நீர்த்தேக்கம் மற்றும் குளங்களைப் புனரமைத்தல் மற்றும் பராமரித்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் போன்றன இந்த நிதிசார் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றினை பெறுமானத்தேய்விடல் அல்லது காலக்கழிவு செய்தல் முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க அச்சொத்துக்களின் உள்ளமை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை தொழில்முயற்சி தனியார் கம்பனியின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்த அதிகாரசபைக்குச் சொந்தமான 260/20 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள கட்டிடம், ஜாவத்தை வீதி இலக்கம் 11 எனும் இடத்தில் நடாத்தப்பட்ட விற்பனை நிலையம் மற்றும் நிராவிய மற்றும் கலங்குட்டிய பண்ணைக் காணிகள் என்பவற்றிற்கான குத்தகை வாடகை கணிக்கப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

09 வதிவிட தொழில்முயற்சி அலுவலகங்களிடமிருந்து 2011 திசெம்பர் 31 ஆந் திகதி கிடைக்கவேண்டிய குத்தகை வருமானம் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 332,230,109 ஆக இருந்ததுடன் காணிப்பிரிவின் அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 294,355,000 ஆக இருந்ததனால் ரூபா 37,875,109 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய வருமானம் ரூபா 364,966,000 ஆக இருந்ததுடன் அதில் 72% ஆகிய ரூபா 266,557,000 தொகை 1 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக இருந்ததுடன் 20% ஆகிய ரூபா 75,829,000 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வீச்சினையுடையதாகக் காணப்பட்டது. இக் கிடைக்கவேண்டிய வருமானத்தில் 42.5% ஆகிய ரூபா 156,699,160 தொகை ‘‘எச்’’ வலயத்திலிருந்து கிடைக்கவேண்டியிருந்தது.

(ஆ) ‘‘எச்’’ மற்றும் ‘‘பீ’’ வலயங்களிலிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய குத்தகை வருமானத்திலிருந்து முறையே ரூபா 50,694,000 மற்றும் ரூபா 1,795,000 தொகைகள் 2010 ஆம் ஆண்டின் போது ஐயக் கடன்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு ஏற்பாடு செய்வதற்கான அங்கீகாரம் இந்த குத்தகையினை அறவிடுவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக எடுக்கப்பட்ட நடைமுறை, விபரமான அறிக்கை முதலிய கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மகாவலி வென்சர் கெப்பிட்டல் கம்பனியிடமிருந்து அறவிடவேண்டியிருந்த வருமானமாகிய ரூபா 291,264 தொகையிலிருந்து ரூபா 221,306 தொகை நீண்டகாலமாக அறவிடவேண்டிக் காணப்பட்ட நியதிச்சட்ட கடனுக்கான வட்டி மீளாய்வாண்டின் போதும் அறவிடப்படாது காணப்பட்டது. ‘‘கடன் வட்டி மாத்திரமின்றி அதற்குரிய கடன்தொகையும் உள்ளடக்கிய ரூபா 8,619,071 தொகையினை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது’’ என்பது பணிப்பாளர் நாயகத்தின் பதிலாகும்.

(ஈ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆயத்தப்படுத்தல் முற்பணங்களின் பெறுமதி ரூபா 20,954,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 18,293,231 தொகை 2003 ஆம்

ஆண்டின் போது முடிவடைந்த ‘‘ஜீ’’ வலயத்தின் மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம் மகாவலி ‘‘எச்’’ வலயத்தில் அமுல்படுத்தப்பட்டு 2005 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்த புனரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் (எச்ஆர்ஆர்பீ) ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்ட ஆயத்தப்படுத்தல் முற்பணமாக இருந்ததுடன் இவற்றை அறவீடு செய்வதற்காக எதுவித சட்ட நடவடிக்கைகளையும் அதிகாரசபை எடுத்திருக்கவில்லை. இச்செயற்திட்டத்தின் கீழ் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட முற்பணமாகிய ரூபா 12,895,522 தொகையினையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

‘‘2012 ஆகஸ்ட் 02 ஆந் திகதி இது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன’’ என்பது பணிப்பாளர் நாயகத்தின் பதிலாகும்.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 487(2) ஆம் பந்தி | வரையறுத்த மகாவலி விவசாய சேவைகள் தனியார் கம்பனி மற்றும் வரையறுத்த மகாவலி பொறியியலாளர் சேவை தனியார் கம்பனி இவ் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு, 1984 யூன் 12 ஆந் திகதிய 256/84 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றுநிருபம் 1989 மார்ச் 23 ஆந் திகதிய 19/89 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் 1989 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய 39/89 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம், 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 07/97 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் என்பன. | 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஒரு மாதத்திற்கு ஒரு திகதிப்படி 24 நாட்கள் விடுமுறை நாட்களில் சேவையாற்றியமைக்கு பணிப்பாளர் நாயகம் சமர்ப்பித்த ஒரு கொடுப்பனவு சான்றுறுதிக்காக முன் அற்கீகாரம், வருகைதந்த நாட்கள், நேரம், மேற்கொண்ட கடமைகள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளாது 2008 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 78,165 செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் | கூட்டுத்தாபனம் நியதிச்சட்ட சபைகள் அரசுடமையாக்கப்பட்ட கம்பனிகள் என்பவற்றின் |

| | |
|---|---|
| சுற்றுநிருபம் மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ.05 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபம் | ஊழியர்களுக்கு அமைச்சரவை அல்லது பொது நிருவாக அமைச்சு அல்லது பொது திறைசேரியினால் அங்கீகரிக்கப்படுகின்ற நலன்கள் மாத்திரமே செலுத்தக்கூடியதான போதிலும் அதற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகாரசபையினதும் அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் அனைத்து பொறியியலாளர்களுக்கும் பட்டயத் தகமை பெற்றுக்கொள்ளாத ஏனைய 03 உத்தியோகத்தர்களுக்கும் பட்டயத்தகமை பெற்ற ஒரு உத்தியோகத்தருக்கும் மீளாய்வாண்டிற்காக ரூபா 16,041,929 தொகை தொழில்சார் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றுநிருபத்தின் 8:12 ஆம் பந்தி | மகாவலி “பீ” ஒருங்கிணைந்த செயற்திட்டத்தின் 04 வீதி நிர்மாண ஒப்பந்தங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 16,471,600 தொகையான ஆயத்தப்படுத்தல் முற்பணங்களுக்கான ரூபா 1,976,586 தொகையான பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (உ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபம்<br>-------------------------------------------------------- | |
| (i) 2006 செப்தெம்பர் 22 ஆம் திகதிய 2006/30 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக 2007 ஒக்டோபர் 18 ஆந் திகதிய 2007/198/2480 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மூலமான உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் பணிப்பாளர் சபைத் தலைவர் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளத்தினை 2006 யூலை 02 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் ரூபா 61,655 வரை (எச்எம் 2-3 சம்பள அளவுத்திட்டத்தின் 10 ஆவது படிமுறை) அதிகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2006 யூன் மாதத்திலிருந்து 2007 ஒக்டோபர் வரை நிலுவைச் சம்பளமாக ரூபா 276,751 தொகை 2007 நவம்பர் மாதத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) 2006 திசெம்பர் 31 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஏ1/சம்பளம் ஆம் | இச்சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட |

| | |
|---|---|
| இலக்க சுற்றுநிருபத்தின் ix ஆம் பந்தி | பணிப்பாளருக்கு (நிதி) ரூபா 55,000 மாதாந்த படி செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கை அல்லது நியமனக் கடிதத்துடன் தொடர்பற்ற 04 படிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 1,348,287 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. |

### 1.2.6 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சியம்பலாகஹகம், பனங்காணி, ஹிரியால ஆகிய மூன்று குளங்களில் வண்டல் படிவு மற்றும் நீர்வாழ் தாவரங்களை அகற்றி புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்காக ரூபா 5,971,940 பெறுமதி கொண்ட மதிப்பீட்டினை அங்கீகரிப்பதற்கு முன்னர் அச்செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

ரனோராவ குளத்தில் மேற்கூறிய புனரமைப்ப நடவடிக்கை இரண்டு கட்டங்களில் ஒரே விவசாயச் சங்கத்தின் மூலம் ரூபா 2,566,282 பெறுமதிக்குத் தயாரிக்கப்பட்ட இரண்டு மதிப்பீடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த விவசாயச் சங்கத்திற்கு வழங்கக்கூடிய ஒப்பந்த எல்லையாகிய ரூபா 2 மில்லியன் மிகைத்திருந்த அதேவேளை ஒரு செயற்பாட்டிற்காக முறைப்படியான மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்த பலவீனமும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வரையறுத்த மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில்முயற்சி (தனியார்) கம்பனிக்கு அதிகாரசபையினால் ஒப்படைக்கப்பட்டிருந்த 1200 ஏக்கர் அளவிலான முதுவெல்ல கால்நடை பண்ணை மற்றும் 1500 ஏக்கர்கள் அளவிலான சித்தபுர கால்நடை பண்ணை முறையற்ற வகையில் சீஜசீ விவசாய (தனியார்) கம்பனிக்கு அதிகாரசபையின் இணக்கப்பாடின்றி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) குத்தகை வாடகையினை அறவிடாமை**

ரீ.பீ.ஜாயா மவத்தையில் அமைந்துள்ள அதிகாரசபைக்குச் சொந்தமான 12,432 சதுரஅடி அளவிலான அலுவலக இடவசதி தெங்கு அபிவிருத்தி மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தினை நடாத்துவதற்காக முறையான உடன்படிக்கையின்றி 2011 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டிற்காக அறவிடவேண்டி இருந்த குத்தகை வாடகை ரூபா 7,661,373 ஆக இருந்தது.

**(ஆ) வாகனத்தின் தவறான பயன்பாடு**

------------------------------------------------------

''எச்'' வலயத்திலுள்ள வதிவிட தொழில் முயற்சி முகாமையாளரினால் 2010 மே மாதத்திலிருந்து அவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனத்திற்கு மேலதிகமாக அங்கீகாரமின்றி மேலுமொரு வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த வாகனம் 2010 மே மாதத்திலிருந்து அலுவலக வளவிற்கு வருகைதராதிருந்த போதிலும் அவரால் அது அனைத்து பயணத்திற்காகவும் கையெழுத்திடப்பட்டு சான்றுபடுத்தப்பட்டிருந்தது. வாகனத்தின் நாளாந்த பயணம் தமுத்தேகமவிலிருந்து ஆரம்பிக்கப்படுவதாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அது பற்றி வருகைப் பதிவேட்டின் பிரகாரமும் வாயிற்கதவு அறிக்கையின் பிரகாரமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு இந்த வாகனம் அலுவலகத்தில் பயன்படுத்தாத காலத்தின் போது அலுவலகத்தினால் மேற்கொண்ட ரூபா 201,385 தொகையான பழுதுபார்த்தல் செலவுகள் மற்றும் 04 புதிய டயர்களுக்கான செலவுகளை உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே 2011 செப்தெம்பர் 16 ஆந் திகதியிலிருந்து வதிவிட தொழில்முயற்சி அலுவலகத்திற்கு இன்னுமொரு வதிவிட தொழில்முயற்சி முகாமையாளர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். இதற்கிணங்க இரண்டு உத்தியோகத்தர்களினாலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்த எரிபொருளுக்காக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 682,298 ஆகும். இப்பணமும் 2012 யூன் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**02. நிதிசார் மீளாய்வு**

----------------------------

**2.1 நிதிசார் விளைவுகள்**

----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் அரசாங்கத்தின் மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 1,930,432,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,205,591,000 ஆக இருந்தது. ரூபா 1,780,000,000 தொகையான அரசாங்க பங்களிப்பைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 150,432,000 வரை குறைவடைந்திருந்ததுடன் ரூபா 1,730,000,000 தொகையான முன்னைய ஆண்டிற்கான அரசாங்கத்தின் பங்களிப்பைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் அந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 475,591,000 வரை குறைவடைந்திருந்தது. இதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 325,159,000 தொகையான முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு கீழே தரப்படுகின்றது.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பற்றாக்குறை ரூபா 325 மில்லியனால் அல்லது 70% ஆல் குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அறவிடமுடியாக் கடனிற்காக ரூபா 266.8 மில்லியன் ஏற்பாடு செய்தலும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறான ஏற்பாடு செய்யாமையும் அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் பராமரிப்புச் செலவுகள் 36% ஆல் அல்லது ரூபா 5.9 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய செலவுகள் 37% ஆல் அல்லது ரூபா 22.7 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அதிகாரசபை பெற்றுக்கொண்ட வருமானம் ரூபா 77 மில்லியனால் அல்லது 22% ஆல் அதிகரித்திருந்ததுடன் ஏனைய வருமானம் ரூபா 32 மில்லியனால் அல்லது 81% ஆலும் வரி வருமானம் ரூபா 22 மில்லியனால் அல்லது 10% ஆலும் அதிகரித்திருந்தமை அதற்கான காரணமாக இருந்தது.

(ஈ) சுழற்சி நிதியத்தின் வருமானம் ரூபா 5 மில்லியனால் அல்லது 21% ஆல் குறைவடைந்தமையினைத் தவிர்த்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது மிகுதி 4 வருமான விடயங்கள் 15% இலிருந்து 94% வரையான அளவினால் முன்னேற்றமடைந்திருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 ஒட்டுமொத்த காணி அபிவிருத்தி**

மகாவலி பிரதான திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 14 வலயங்களுக்கான மொத்த காணியின் அளவு 420,170 ஹெக்டேயர்களாக இருந்தது. தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள காணியின் அளவு 102,528 ஹெக்டேயர்களாக இருந்ததுடன் மொறகஹகந்த செயற்திட்டத்தின் கீழ் தற்பொழுது

அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்ற காணிகளின் அளவு 81,422 ஹெக்டேயர்களாகும். மிகுதியான 236,220 ஹெக்டேயர் காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக இன்னும் உறுதியான அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

பணிப்பாளர் நாயகத்தின் பதிலின்படி நிகழ்கால சமூகத் தேவைப்பாட்டின் பிரகாரம் மகாவலி பிரதான திட்டத்தினை நாளதுவரையாக்கும் நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதன் பெறுபேறுகளின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் திட்டமிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 3.1.2 செயற்திட்ட செயலாற்றல்

2011 ஆம் ஆண்டிற்காக அதிகாரசபையின் மூலதனச் செலவு மதிப்பீடு ரூபா 6,392 மில்லியனாக இருந்ததுடன் உள்ளபடியான செலவுகள் ரூபா 3,755 மில்லியனாக இருந்தது. எஞ்சிய நிதி ஏற்பாடு 41% ஆக இருந்ததுடன் பின்வரும் செயற்திட்டங்களின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு இது காரணமாக இருந்தது.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | நிதி ஏற்பாட்டின் சேமிப்பு | சேமிப்பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | % |
| (அ) | அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்களைத் திட்டமிடல் செயற்திட்டம் | 2,412 | 1,233 | 1,179 | 48.9 |
| (ஆ) | மொறகஹகந்த களுகங்க அபிவிருத்திச் செயற்திட்டம் | 2,280 | 1,236 | 1,044 | 45.7 |
| (இ) | சாத்தியவள ஆய்வு | | | | |
| | (i) மொறகஹகந்த களுகங்கை கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி | 300 | 11 | 289 | 96 |
| | (ii) மல்வத்துஓயா, மாதுரு ஓயா தெற்கு கரை மற்றும் வெலி ஓயா | 20 | - | 20 | 100 |
| (ஈ) | மஹாவலி வலயங்களின் செலவுகள் | 1,095 | 798 | 297 | 27 |
| | தலைமை அலுவலகம் | 200 | 56 | 144 | 72 |

**3.1.3** தெரிவுச் செவ்வையில் வெளிப்படுத்தப்பட்டவாறு மகாவலி ''எச்'' வலயத்தில் மற்றும் ''பி'' வலயத்தில் ஒருங்கிணைந்த செயற்திட்டத்திற்கான பின்வரும் செயற்பாடுகளின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**(அ) 50% இனை விட குறைவான செயல்முன்னேற்றத்துடனான செயற்திட்டம்**

பின்வரும் செயற்திட்டங்களின் செயலாற்றல் மீளாய்வாண்டின் இறுதியளவில் 50% இனைவிட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

- ஒரு நாள் கோழிக்குஞ்சுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 44% அளவில் காணப்பட்டது.
- விவசாயச் சங்கங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 37% அளவில் இருந்தது.

**மகாவலி ''எச்'' வலயம்**

- குளங்களுக்கு மீன் குஞ்சுகளை இடும் நிகழச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 18.5% ஆக இருந்தது.
- சேதனப் பசளைப் பிரிவினைத் தோற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 34% ஆக இருந்தது.
- பசுமாடுகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் 34% ஆக இருந்தது.

**(ஆ) 50% இற்கு மேல் பூர்த்திசெய்த ஆனால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்படாத செயற்திட்டம்**

**மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம் ''பீ'' வலயம்**

- பசுமாடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆண்டின் போது அடைந்து கொள்ளப்பட்ட இலக்கு 75% ஆகும். இச்செயற்திட்டத்தின் கீழ் 2007-2012 செயற்திட்ட காலத்தில் 1000 பசுமாடுகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 2011 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்டிருந்த பசுமாடுகளின் எண்ணிக்கை 522 ஆகும்.

- இதற்கிணங்க நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செயல்முன்னேற்றம் 52% ஆகும்.

**மகாவலி ''எச்'' வலயம்**

விவசாயக் கிணறுகளை நிர்மாணித்தல் - செயல்முன்னேற்றம் 50%

**(இ) அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்கள்**

ஒருங்கிணைந்த ''பீ'' செயற்திட்டத்தினதும் ''எச்'' வலயத்தினதும் திட்டமிடப்பட்ட பின்வரும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- விவசாயச் சங்கங்களை வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்
- தெரிவுசெய்யப்பட்ட குளங்களுக்காக மீன் வலைகளை வழங்குதல்
- பயிர் மீன்பிடிப்படகுகள் வழங்குதல்
- மகளிர் அபிவிருத்தி நடவடிக்கைகள்
- தொழில்முயற்சி மற்றும் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

### 3.1.4 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

''எச்'' வலயத்தில் அமைந்துள்ள அதிகாரசபைக்குச் சொந்தமான பயிற்சி நிலையமாகிய தெல்ஹிரியாவ பயிற்சி நிலையம் அதிகாரசபையின் ஊழியர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்குரிய சுயதொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முதலியவற்றை அமுல்படுத்துவதற்காக நடாத்தப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டின் போது அதற்குரிய எந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டமும் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த பயிற்சி நிலையத்தினைத் தோற்றுவித்த குறிக்கோள் அடையப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபைக்கு எதிராகவும் அதிகாரசபையினாலும் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 152 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தனியார் கம்பனியினால் கொத்மலை விடுமுறை விடுதி நடாத்தப்பட்டு வந்த காணி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டமை சம்பந்தமாக ரூபா 100 மில்லியன் இழப்பீடு கோரி 2007 ஆம் ஆண்டின் போது ஒரு வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

1992 யூலை 15 ஆந் திகதி அமப/1992 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கூறிய கம்பனியுடன் அதிகாரசபை இணைந்து

திரையரங்குத் தொகுதி நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் இரண்டு தரப்பினரும் அதற்காகச் செயற்பட்டிருக்கவில்லை.

(ii) 15 ஊழியர்களைச் சேவையிலிருந்து நீக்குவது தொடர்பாக தொழில் நியாயசபை வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக மேல்நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கருத்தில் கொள்ளாது உயர் நீதிமன்றத்திற்கு மேன் முறையீடு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு மாற்றமடைந்திருக்கவில்லை.

அதற்கிணங்க 2007 திசெம்பரிலிருந்து 2010 யூலை வரை நிலுவைச் சம்பளமாக ரூபா 8,000,301 தொகையினைச் செலுத்துமாறு 2011 திசெம்பர் 23 ஆந் திகதி சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்திருந்ததுடன் 2012 ஆகஸ்ட் வரை அப்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கிணங்க மேற்குறித்த நீதிமன்றங்களுக்கு மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்ததன் காரணமாக சேவையினைப் பெற்றுக்கொள்ளாத 13 ஊழியர்களுக்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு மாத்திரம் அதிகாரசபைக்கு நேர்ந்திருந்தது.

(iii) 1997 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையின் சாரதி ஒருவரால் ஓட்டப்பட்ட காணி ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான லொறியில் மோதி மரணமடைந்த நபருக்காக வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் அவரில் தங்கியிருப்போருக்கு ரூபா 1,900,000 தொகையான இழப்பீடு 2012 மார்ச் 26 ஆந் திகதி அதிகாரசபையினால் செலுத்தவேண்டி ஏற்பட்டது.

இந்த வாகனம் விபத்திற்கு உள்ளாகிய சந்தர்ப்பத்தில் உரிமை, வருமான உத்தரவுப் பத்திரம் காணி ஆணையாளரிடம் காணப்பட்டதனாலும் காப்புறுதிச் சான்றிதழ் இதுவரை கூட்டுத்தாபனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையாலும் இதுவரை இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

இந்த வழக்கினை நடாத்துவது தொடர்பான விபரத்தினைப் பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்டவாறு அதிகாரசபையின் சட்ட பணிப்பாளரால் சட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மேன்முறையீட்டு அறிவித்தலில் கையெழுத்திடாததன் காரணமாக உயர் நீதி மன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு மறுக்கப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

''எச்'' வலயத்திலுள்ள களஞ்சியத்தினை பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்டவாறு 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான களஞ்சிய மெய்மையாய்வின் போது அழிக்கக்கூடியதாக அல்லது கேள்வி கோரி விற்பனை செய்யக்கூடியதாக

இனங்காணப்பட்ட தளபாட உபகரணங்கள், கட்டிட உபகரணங்கள், வாகன உதிரிப்பாகங்களை உள்ளடக்கிய அதிக அளவிலான பொருட்கள் தேவையான நடவடிக்கை எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது.

### 3.4 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

ஒருங்கிணைந்த செயற்திட்டம் ''பீ'' வலயத்தின் கீழ் ரூபா 270 மில்லியன் செலவில் 06 பிரிவுகளிலுள்ள 31 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 25 குடிநீர்த் திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2011 ஒக்டோபர் மாதம் கணக்காய்வுத் திகதி வரையும் ரூபா 67.6 மில்லியன் பெறுமதியான 04 பெரிய நீர்த்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

### 3.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை | கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதி | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிலைமை | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | | |
| (அ) | வாகனம் - ''எச்'' வலயம் | | | | |
| | பழுதுபார்ப்பதற்காக மடாடுகம இயந்திர பொறியியலாளாருக்கு 2011 யூலை 12 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்ட வாகனம் | 09 | 7,850,000 | பயன்படுத்தப்படாதது | 03 ஆண்டுகள் அளவில் |
| (ஆ) | தெல்ஹிரியாவ பயிற்சி நிலையம் | | | | |
| (i) | விடுதியும் உத்தியோகபூர்வ வதிவிடமும் | 02 | 1,647,300 | பயன்படுத்தபடாதது | 2009 ஆம் ஆண்டிலிருந்து |
| (ii) | செயற்படாத பழைய பம்பிகள் நிலையம் | 01 | பெற்றுக்கொள்ள முடியவில்லை. | பயன்படுத்தப்படாதது | கணிக்கப்படவில்லை |
| (iii) | கட்டிடத் தொகுதி | 01 | 15,285,000 | குறைவாகப் பயன்படுத்தப்பட்டது | பல ஆண்டுகளாக |

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

''எச்'' வலயத்திலுள்ள 04 குளங்களின் சேற்று மண்ணை அகற்றி முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 21,862,487 பெறுமதிக்குத் தயாரிக்கப்பட்ட 04 மதிப்பீடுகள் நிறைவேற்றுப் பணிப்பாளரின் (தொழில்நுட்பச் சேவை) ஆலோசனையின் படி தாமதிக்கப்பட்டதன் காரணமாக கொள்வனவு நடைமுறைகளை மீறி விவசாயக் குழுக்களுக்கு வழங்கக்கூடிய வகையில் ஒரு மதிப்பீடு ரூபா இரண்டு மில்லியன்களை அதிகரிக்காத வகையில் ரூபா 7,697,308 பெறுமதிக்கு மீண்டும் தயாரிக்கப்பட்டிருந்தது.

மதிப்பீட்டினை மாற்றியமைத்தல் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| | குளத்தின் பெயர் | முழுமையான புனரமைப்பிற்கான மதிப்பீடு | திருத்தம் செய்யப்பட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| I. | துனுதம்பு குளம் | 6,195,487 | 1,996,650 |
| II. | கரம்பேவ குளம் | 6,763,997 | 1,997,433 |
| III. | பஹலவெடியாவ குளம் | 6,702,256 | 1,706,575 |
| IV. | ஒத்தப்புவ பன்சலே குளம் | 2,200,745 | 1,996,650 |
| | | 21,862,485 | 7,697,308 |

மீண்டும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் ஏற்கனவே திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் $^1/_3$ மாத்திரம் நிறைவேற்றப்படுவதற்கு இனங்காணப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்படுகின்றது. எனினும் சேற்று மண்ணை அகற்றுதல் ஆகிய செயற்பாட்டில் $^1/_3$ பங்கு மாத்திரம் நிறைவேற்றுதலானது பொருளாதார ரீதியாக விளைவற்றவை என்பது அவதானிக்கப்படுகின்றது.

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

''பீ'' வலயத்திலுள்ள ஒருங்கிணைந்த செயற்திட்டத்தின் கீழ் அசேலபுர பிரிவில் ரன்சரதென்ன அலகின் டீ 402 பிரதான கால்வாயைப் புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 2,931,015 தொகைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ஒப்பந்தம் 2010 ஏப்ரல் 12 ஆந் திகதி வரையும் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டிருந்த போதிலும் 2010 மே 14 ஆந் திகதி ரூபா 3,559,998 பெறுமதியான அசேலபுர, குருஏபெத்த, அலகின் விநியோகக் கால்வாயைப் புனரமைப்புச் செய்வதற்கான ஒப்பந்தத்தை மீண்டும் அவருக்கு வழங்குவதற்கு மகாவலி ஒருங்கிணைந்த புனரமைப்புச் செயற்திட்டத்தின் (பீ வலயம்) உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2011 ஏப்ரல் 30 ஆந் திகதி ஒப்பந்தக்காரரால் அவ் ஒப்பந்தமும் கைவிடப்பட்டிருந்தது.

கைவிடப்பட்டிருந்த அவ் ஒப்பந்தத்திற்காக அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 830,927 ஆக இருந்த போதிலும் அதனை 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

பீஈடீ 12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.9 ஆம் பந்தியுடனான முரண்கள்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதிகாரசபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் விவசாய அபிவிருத்தி அமைச்சினாலும் இன்னும் 15 வாகனங்கள் நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினாலும் இன்னும் 06 வாகனங்கள் ஏனைய தரப்பினர்களினாலும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதிகாரசபையின் நிரந்தரப் பதவியணியில் உள்ளடக்கப்பட்ட 10 சாரதிகள் நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் சம்பளம் அதிகாரசபையினால் ஏற்கப்பட்டிருந்தது. அதற்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய நிறுவனங்களிலிருந்து மீளளிப்புச் செய்யப்படவேண்டிய தொகை ரூபா 3,138,762 ஆக இருந்தது.

(இ) வெளிநாட்டு உதவிச் செயற்திட்டமான அணைப்பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையின் நிரந்தரப்பதவியணிக்குச் சொந்தமான 22 பொறியியலாளர்கள், 7 சாரதிகள் ஆகியோரை உள்ளடக்கி ஏனைய பதவிகளிலுள்ள 17 பேரும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த இணைத்துக்கொள்ளல் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் முறைப்படியாக இடம்பெற்றிருக்கவில்லை.

செயற்திட்டத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள இந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்காக மேற்கூறிய சுற்றுநிருபத்தின் 4:1:3 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் சம்பளத்தில் 1/3 பங்கு படிகள் மாத்திரம் வழங்கப்பட்டதன் காரணமாக அவர்கள் வேலை ஒப்படைப்பு அடிப்படையில் செயற்திட்டத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த உத்தியோகத்தர்களிடமிருந்து எதுவித சேவையும் அதிகாரசபைக்கு

கிடைத்திருக்காததுடன் அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகள் மாத்திரம் 29 உத்தியோகத்தர்களுக்கு 2011 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 11,010,096 தொகையான சம்பளம் அதிகாரசபைக்கு விளைவற்ற செலவு என்பது அவதானிக்கப்பட்டது.

**3.9 தாமதமடைந்த செயற்திட்டங்கள்**

(அ) தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு ‘‘பீ’’ வலயத்தில் அமுல்படுத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,059,720 தொகையான மகசென்புர பிரிவின் உப கால்வாய்களைப் புனரமைப்பதற்கான ஒப்பந்தம் மற்றும் பெலேடியாவ நீர்த்திட்டத்தினை அமுல்படுத்துவதில் தாமதங்கள் காணப்பட்டன.

**(ஆ) இடைநடுவில் நிறுத்தப்பட்ட செயற்திட்டம்**

விபரம் கீழே தரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இலக்கம் | செயற்பாடு | ஒப்பந்த பெறுமதி<br>ரூபா | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல்முன்னேற்றம்<br>% |
|---|---|---|---|---|
| (i) | எஸ்வைபீ/எம்சீபீ/24ஏ/ டீசீ/ஆர்எப்சீ/79 | குருளுபெத்த பிரிவில் விநியோக கால்வாயினைப் புனரமைத்தல் | 3,559,998 | கணிக்கப்படவில்லை |
| (ii) | எஸ்வைபீ/எம்சீபீ/இஸட்1/ ஆர்எப்சீ/டப்ளிவ்எஸ்/4 | பெலேடியாவ நீர் திட்டம் | 22,376,912 | கணிக்கப்படவில்லை |

கைவிடப்பட்ட 03 ஒப்பந்தங்களுக்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 4,920,508 ஆக இருந்ததுடன் அப்பணம் அறவிடப்படாதிருந்ததுடன் பணிப்பாளர் நாயகத்தின் கூற்றின் பிரகாரம் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தினை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதாகும்.

**3.10 ஆளணி நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ‘‘எச்’’ வலயத்தின் ஒட்டுமொத்த பதவியணி**

(i) 2011 திசெம்பர் மாதத்தில் ''எச்'' வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது வலய அலுவலகங்களின் 07 பிரிவு அலுவலகங்களிலும் 26 அலகு அலுவலகங்களிலும் 135 பதவியணியினர் இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை 69 ஆக இருந்ததனால் வெற்றிடங்கள் 66 ஆகக் காணப்பட்டது.

இரண்டாம் மற்றும் மூன்றாந்தர பதவிகளில் வெற்றிடம் 48% ஆக இருந்ததுடன் இந்த பதவியினர் பற்றாக்குறை காரணமாக உரிய அலுவலகங்களின் நடவடிக்கை முறைப்படியாகவும் காலரீதியாகவும் மேற்கொள்வதில் சிக்கல்கள் உருவாகி இருந்தது.

(iii) மேற்கூறியவாறு பதவிகளில் ஊழியர் வெற்றிடம் காணப்பட்டிருந்தும் வேலையாளர் போன்ற 04 பதவிகளுக்காக 27 ஊழியர்கள் மிகையாக காணப்பட்டனர்.

மேற்கூறிய விடயங்களின் பிரகாரம் ''எச்'' வலயத்தின் பதவியணியினர் நிறுவனத்தின் குறிக்கோள்களை ஆக்கபூர்வமாக நிறைவேற்றக் கூடியவகையில் முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் ''பீ'' வலயத்தில் அமுல்படுத்தப்பட்ட மகாவலி ''பீ'' செயற்திட்டத்தின் பதவியணியினர் மற்றும் மொறகஹகந்த களுகங்க செயற்திட்டத்தின் பதவியணியினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 04. கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

(அ) 2011-2015 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது 2012 - 2016 இற்கு இடைப்பட்ட 05 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மஹிந்த சிந்தனை பத்து ஆண்டுத்திட்டத்தின் பிரகாரம் நீர்ப்பாசனப் பிரிவினால் அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள் தொடர்பாக கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான நடைமுறைகளை இனங்கண்டு அவற்றினை அமுல்ப்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அது தொடர்பாக கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்படவேண்டிய போதிலும் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

(அ) 2010 நவம்பர் 30 ஆந் திகதியிலிருந்து பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2012 யூன் 15 ஆந் திகதி வரை தகமை பெற்ற பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக போதியளவு பதவியணியினர் சேர்த்துக்கொள்ளப்படாதிருந்ததுடன் 2011 திசெம்பா் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 10 உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகளும் 03 கணக்காய்வு உதவி உத்தியோகத்தர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(இ) உள்ளக்க கணக்காய்வுப் பிரிவு தலைமை அலுவலகத்தில் தோற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் வலய அலுவலகங்களில் தொடர்ச்சியாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கொள்வனவுத் திட்டம்

2011 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது போதியளவில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டுக் கட்டுப்பாடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பணம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியின் போது இடம்பெற்ற செலவுகளை கவனத்தில் கொண்டு அதற்கிணங்க மொத்தச் செலவு மாற்றமடையாத வகையில் பாதீடு திருத்தப்பட்டு அப்பாதீட்டிற்காக மீண்டும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் இடம்பெற்றுள்ளதனால் பாதீடு ஒரு கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் பணிப்பாளரது நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காணிகளை குத்தகைக்கு வழங்குதல்

(ஆ) கட்டிடங்களின் பயன்பாடு

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல்

I. பசுமாட்டு நிகழ்ச்சித்திட்டம்

II. நன்னீர் மீன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) பயிற்சி நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்

(ஊ) பண்ணை நிர்வாகம்

(எ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஏ) வரி சேகரிப்பு

(ஐ) வாகன ஒதுக்கீடும் கட்டுப்பாடும்

(ஒ) விவசாய குழுக்களுடன் உடன்படிக்கையின் மூலம் வேலையாட்களைப் பெற்றுக்கொள்ளல்